PW 1- திருமதி. தனலெட்சுமி

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) சம்பவத்தன்றே போலீசார் விசாரத்தார்களா அல்லது மறுநாள் போலீசார் விசாரித்தாகள் என்றால் அன்றே காலை 10.30 மணிக்கு விசாரித்தார்கள். சம்பவ ம் நடந்த இடத்தில் விசாரித்தார்களா என்றால் மருத்துவமனையில்விசாரித்தார்கள். மறுபடியும் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எனது அப்பா யாருடன் இருக்கிறார் ராமசாமியுடன் கோவையில் இருந்து வருகிறார். நான் கொடுத்த புகாரிலும் என் முதல் விசாரணையிலும் எனது தம்பி ராமசாமி முள் கட்டையில் அடித்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்த எவ்வளவு நேரத்தில் மருலுத்துவமனை சென்றடைந்தேன் என்றால் 10 நிமிடத்தில் காவல் நிலையம் சென்றுவிட்டு பிறகு சென்றேன். எனது மகன் எங்கு வேலைக்கு செல்கிறார் என்றால் திருப்பூருக்குவேலைக்கு செல்கிறார் சம்பவம்நடந்தஅன்று வேலைக்குசென்றாரா என்றால் செல்லவில்லை. எனது மகன் வரும்போது ராமசாமி முள் கட்டையை போட்டு விட்டு ஓடிவிட்டார் என்றால் சரிதான்.

2) போலீசார்விசாரைணையின் போது முள் கட்டையை காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். எனக்கும் என் தம்பிக்கும் சொத்து பிரச்சனை உள்ளதா என்றால் உள்ளது அதில் முன்விரோதம் இருந்துள்ளது. நான் சொன்ன மாதிரியான சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நான் பொய் புகார்கொடுக்கிறேன் என்றால் சரியல்ல நான் காயத்துடன் தான் மருத்துவமனை சென்றேன். எனக்கு ஏற்கனவே இருந்த முன்விரோதத்தின் காரணமாக நானாக காயத்தை ஏற்படுத்திக்கொண்டு

வஞ்சகம்வைப்பதற்ககாக பொய் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு முன்பு எந்த காயமும் இல்லை.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.11.24 19:49:52 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

PW 2 - திரு. பார்த்திபன்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) நான் எங்கு வேலைக்கு செல்கிறேன் என்றால் திருப்பூருக்கு பனியன் கம்பெனிக்கு வேலைக்கு செல்கிறேன். சம்பவம் நடந்த நாளன்று வேலைக்கு சென்றேன் என்றால் வேலைக்கு செல்லவில்லை. எனது மாமா ராமசாமி எங்கு குடியிருக்கிறாரா என்றால் சம்பவம் நடந்த அன்று எங்கள் வீட்டின் அருகில் குடியிருந்தார். சம்பவம் நடந்த போது நான் வரும்போதே என் மாமா தடியை கீழே போட்டு ஓடிவிட்டார் என்றால் சரிதான்.போலீசர் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் செல்லிய தகவலை தான் புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால்சரிதான். நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லைஎன்றாலும் அவருக்கு எங்களுக்கும் சொத்து பிரச்சனை இருந்ததால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.11.24 19:49:58 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.